**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.50/2019**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜூலை மாதம் 11 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஹரி | மதம் | : இந்து |
| த/பெ | : பக்தவட்சல ரெட்டி | ஜாதி | : – |
| வயது | : 33 | கிராமம் | : புஜ்ஜிரெட்டிபள்ளி |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**11.07.2025**
**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்ட வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

6. என்னிடம் காட்டப்படுவதுதான் 01.07.1998ம் ஆண்டில் வழக்கு சொத்தை பாக்கியம்மாள் மற்றும் சிலர் செய்து கொண்ட பாக ஆவணம் என்றால் **(வா.சா.ஆ1 சாட்சியிடம் காட்டப்பட்டது)** சரிதான். 25.01.2006ம் ஆண்டில் சோமய்யா செட்டி வாதிக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் என்னிடம் காட்டப்படுவது என்றால் இல்லை. வழக்கு சொத்தின் பட்டா வாதி பெயரில் பட்டா எண்.205ல் உள்ளது என்றால் **(வா.சா.ஆ 4 சாட்சியிடம் காட்டப்பட்டது)** சரிதான். வழக்கு சொத்துக்களை இன்றைய தேதி வரை வாதிதான் அனுபவித்து வந்தார் என்பதை காட்ட வரி ரசீதுகள் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கான அனைத்து வருவாய் ஆவணங்களும் வாதி பெயரில்தான் உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

7. வழக்கு சொத்து வாதிக்கு சொந்தமான சொத்து என்றாலும் அவர் அனுபவித்து வருகிறார் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் பத்தி 7ல் நிலஅபகரிப்பு சிறப்பு பிரிவில் புகார் கொடுத்ததற்கு ஆதரவாக நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் புகாரை வாதிகள்தான் கொடுத்தார்கள். நான் கொடுக்கவில்லை. 29.07.2019ம் தேதியிட்டு கடிதம் வந்ததாக பிரமாண வாக்குமூலம் பத்தி 7ல் கூறியுள்ளதற்கு ஆதரவாக நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த கடிதம் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில்

இருந்து வட்டாட்சியருக்கு அனுப்பப்பட்ட கடிதம் ஆகும். பிரமாண வாக்குமூலம் பத்தி 7ல் சொல்லியுள்ளது உண்மையாக இருந்திருந்தால் அதற்கு ஆதரவாக நான் ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

8. வழக்கு சொத்திற்கான அனைத்து வருவாய் ஆவணங்களும், உரிமை ஆவணங்களும் வாதி பெயரில் உள்ளதால் வழக்கு சொத்து வாதிக்கு சொந்தமான சொத்து என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரை வாதிதான் அனுபவித்து வருகிறார் என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான்தான் அனுபவித்து வருகிறேன். நான்தான் அனுபவித்து வருகிறேன் என்பதை காட்ட அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 3 ஆவணமான SLR ல் காட்டப்பட்டுள்ள நபர்களின் வாரிசுகள்தான் நாங்கள் என்பதை காட்ட நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் வழக்கு சொத்து வாதிக்கு சொந்தமான சொத்து என்றாலும் வாதிக்கு ஆதரவாக வழக்கு தீர்ப்பு செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)